செ.வெ.எண்: 67 நாள்:24.08.2016

# பத்திரிகைச் செய்தி

தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் சார்பில் 2016-17-ஆம் ஆண்டிற்கான மாவட்ட அளவிலான கேரம் விளையாட்டுப் போட்டிகள் புதுக்கோட்டை மாவட்ட விளையாட்டரங்கத்தில் மாணவ, மாணவியர்கள் இருபாலருக்கும் ஒற்றையர் மற்றும் இரட்டையர் ஆகிய இரு பிரிவுகளில் கீழ்க்கண்டுள்ளபடி நடத்தப்படவுள்ளது.

இளநிலைப் பிரிவு - மழலை வகுப்பு முதல் 5-ம் வகுப்பு வரை(Juniors - Pre School to 5th Std) பயிலும் சிறுவர் மற்றும் சிறுமியர்களுக்கு ஒற்றையர் மற்றும் இரட்டையர் பிரிவுகளில் 06.09.2016 அன்று காலை 9.00 மணி முதல் புதுக்கோட்டை மாவட்ட விளையாட்டரங்கத்தில் கேரம் போட்டிகள் நடத்தப்படும்.

முதுநிலைப் பிரிவு - 6-ஆம் வகுப்பு முதல் 12-ஆம் வகுப்பு வரை(6th Standard to 12th Standard) பயிலும் சிறுவர் மற்றும் சிறுமியர்களுக்கு ஒற்றையர் மற்றும் இரட்டையர் பிரிவுகளில் 07.09.2016 அன்று காலை 9.00 மணி முதல் புதுக்கோட்டை மாவட்ட விளையாட்டரங்கத்தில் கேரம் போட்டிகள் நடத்தப்படும்.

மேற்காணும் கேரம் விளையாட்டுப் போட்டிகளில் ஒவ்வொரு பள்ளியிலிருந்தும் ஒற்றையர் பிரிவில் 7 மாணவர்களும், 7 மாணவிகளும், இரட்டையர் பிரிவில் 5 மாணவர்கள் அணி மற்றும் 5 மாணவிகள் அணிகளும் கலந்து கொள்ளலாம். போட்டிகளில் கலந்து கொள்ளும் மாணவ, மாணவிகள் தாங்கள் பயிலும் பள்ளி தலைமையாசிரியரிடமிருந்து தாங்கள் எந்த வகுப்பில் பயில்பவர் என்பதற்கான சான்றினைப் பெற்று வருதல் வேண்டும்.

மேற்காணும் தகவலை புதுக்கோட்டை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.கணேஷ்,இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

**செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், புதுக்கோட்டை.**